**24.06.2025 அசல் வழக்கு எண்.165/2008 Starting Time : 01.21 p.m.**

**பி.வா.சா.3 திருமதி மணியம்மாள் என்கிற ருக்மணி க/பெ. வரதன்.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமசப்பய்யர் மற்றும் அவரது சகோதரர் பத்ரி அய்யர் ஆகியோர் ஏற்படுத்திக்கொண்ட பாக ஆவணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. நாங்கள் கிரயம் வாங்கும்போது வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்து அதில் ராமசுப்பய்யர் மற்றும் அவரது சகோதரர் பத்ரி அய்யர் ஏற்படுத்திக்கொண்ட பாக ஆவணத்தை பற்றி தெரிந்துக்கொண்ட பின்பு தான் கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழில் காலமான 1ம் வாதியின் பெயரில் உள்ள போக்கியம் ஆவணம் (வா.த.சா.ஆ.1) பற்றிய பதிவு இருந்ததா என்றால் தெரியாது. ராமசப்பையர், பத்ரி அய்யர் ஏற்படுத்திக்கொண்ட பாக ஆவணம் எந்த ஆண்டு என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் கிரயம் வாங்கிய ஆண்டு ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. காலமான 1ம் வாதி குடியிருந்த இடத்தில் கிரயம் வாங்கினேனா என்றால் அவரது இடத்திற்கு தள்ளி உள்ள இடத்தை கிரயம் வாங்கினேன். காலமான 1ம் வாதி போலச்சியம்மாளின் இடம் தற்போது வரை காலியாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தை காலமான 1ம் வாதியின் மகன் 2ஆம் வாதி துரைக்கண்ணு தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரி தான். மேற்படி இடத்தில் குடிசை வீடு இருந்தது, அது எரிந்து போய்விட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு காலமான 1ம் வாதியின் இடத்தில் இருந்த குடிசை வீடு எரிந்து போனது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் இருந்து அதிகாரிகள் வந்து மேற்படி எரிந்து போன இடத்தை பார்வையிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது கிரயம் பெற்ற இடத்தை விற்ற பிறகும், எனது கணவர் காலமான பின்னிட்டும் நான் எனது மகளின் வீட்டில் பூந்தமல்லியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போதும் அங்கிருந்து தான் வந்தேன். யார் அழைத்ததின்பேரில் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் 1ம் பிரதிவாதியின் கணவர் அழைத்ததின்பேரில் வந்தேன். நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வருவதற்கு செலவுத் தொகையை 1ம் பிரதிவாதியின் கணவர் தான் கொடுக்கிறார் என்றால் சரிதான். வழக்கு

தாக்கல் செய்தபோது நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்ததா என்றால் வந்தது. எனக்காக தனியாக வழக்கறிஞர் வைத்துள்ளேனா என்றால் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறேன். எனது தரப்பில் பதில் மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கிரயம் பெற்று 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்துகளை பற்றிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். எனது சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்ததற்கு எவ்வளவு தொகை பெற்றேன் என்றால் அது என் கணவர் தான் மேற்படி தொகையை பெற்றுக்கொண்டார். ராமசுப்பய்யர், பத்ரி அய்யருக்கும் சொத்தில் பாதி என்றால் மேற்படி சொத்தில் நீள அகலத்திலும் பாதி தான் இருக்கும் என்றால் சரிதான். எனது கிரய ஆவணத்திலும் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்த ஆவணத்திலும் வடக்கு தெற்காக 143 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ராமசுப்பய்யர் பூமியையும், பத்ரி அய்யர் பூமியையும் சேர்த்து கிரயம் பெற்றேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். பத்ரி அய்யரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரது மகன் சாய்கிருஷ்ணனை தெரியுமா என்றால் தெரியும். பொன்னப்பன் என்பவர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் சாய்கிருஷ்ணனின் நிலத்தை பயிர் செய்தவர் ஆவார். அவர் சாய்கிருஷ்ணனிடம் வேலை செய்து வந்ததால் அவருடனே இருப்பார் என்றால் சரிதான். வரத பண்டிதர் தெரியுமா என்றால் தெரியாது. மருதாடு கூட்டுறவு சொசைட்டிக்கு செல்லும் வழி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சொசைட்டி அருகில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி பொன்னப்பன் தான் சாய்கிருஷ்ணனுக்கு காலமான 1ம் வாதி கிரய உடன்படிக்கை (வா.த.சா.ஆ.2) செய்துக் கொடுத்தபோது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சாய்கிருஷ்ணன் கூட்டுறவு சொசைட்டி மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.176/1997 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இடத்தை வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்தபோது எனது கணவர் உடன் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண்.176/1997 என்ற வழக்கில் சாய்கிருஷ்ணன் நான், 1ம் பிரதிவாதிக்கு கிரயம் ஏதும் செய்யவில்லை என்று சாட்சி சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சாய்கிருஷ்ணனுக்காக மேற்படி வழக்கில் என் தரப்பு வழக்கறிஞர் தான் வழக்கை நடத்தினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நானும், 1ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட கிரயத்திற்கு தொகை ஏதும்

நான் பெறவில்லை என்பதால் மேற்படி கிரயம் மறுபயன் அற்றது என்றும், அதனால் செல்லாது என்றால் சரியல்ல. இன்று வரையும் தாவா இடத்தை 2ம் வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும், அதில் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி ஆக்ரமிப்பு செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது என் கணவருக்கு தான் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**Ending time : 01.49 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.